மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்குப் பின்னால் ஏற்பட்ட சூழ்நிலையை யொட்டி அமைதியாக தொழிற்சாலைகள் நடந்துகொண்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : இன்றைக்குத் தொழிற்சாலைகள் அமைதியாக நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால் அது சுடுகாட்டு அமைதி தான். அங்கேயுள்ள தொழிலாளர்களிடம் வற்புறுத்தி எழுதி வாங்கிக் கொண்டு அவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறாமல் 15 தொழிலாளர்களையும் டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ? இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கே அமைதி நிலவுவதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. மேலும் அங்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி நான் விவரம் தரமுடியும். சுந்தரம் கிளேட்டனில் 61 பேர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டார்கள், 29 பேர்கள் மீது நடவடிக்கை முடிவு செய்யப்பட்டுள்ளது, 8 பேர்கள் வேலைக்கு (ஜனவரி 13-ம் தேதி) திரும்பி வந்து விட்டார்கள், 8 பேர்கள் ரிஸைன் செய்து விட்டார்கள், 2 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்கள், 11 பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள், 8 பேர்கள் 'எக்ஸானரேட்' செய்யப்பட்டார்கள், 6 பேர்களுக்கு இன்கிரிமென்ட் கட் செய்யப்பட்டது, ஒருவருக்கு பனிஷ்மென்ட் என்ன என்று இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

ஹூகாஸ். டி. வி. எஸ். தொழிற்சாலையில் 67 பேர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டதில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை, அடுத்ததாக பிரேக்ஸ்-இந்தியா நிறுவனத்தில் பாதிக்கப்பட்ட 107 பேர்களில் 19 பேர்கள் மீது விசாரணை முடிந்திருக்கிறது. இரண்டு நாட்கள் சஸ்பென்ஷன் என்று இருந்ததே தண்டனை என்று முடிவு எடுக்கப்பட்டது, எண்பத்தி எட்டு பேர்கள் மீது நடவடிக்கை முடிவாகவில்லை.

Taxis and Auto-rickshaws in Madras City.

*Q. 456. **Thiru S. GANESAN** : Will the Hon. the Minister for Transport be pleased to state ;

(a) the total number of taxis and Auto-rickshaws now in Madras City; and

(b) whether they are in proportion to the population of Madras City ?

1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

(அ) 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி சென்னை மாநகரில் 2,434 வாடகை மோட்டார் வண்டிகளும் (டாக்சி) 1,521 ஆட்டோ ரிக்ஷாக்களும் உள்ளன.

(இ) குறிப்பிட்ட ஒரு வகை வண்டிகளின் எண்ணிக்கையோடு மாநகர மக்கள் தொகையைத் தொடர்பு படுத்துவது இயலாது.

(முற்பகல் 10-10.)

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே வாடகைக்கார் ஓட்டுநர்களும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களும் பல ஆண்டுகளாக தங்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் வேண்டுமென்று கோரியும் "எங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் தரப்படவில்லை. இந்த அரசாவது எங்களுடைய வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்குமா" என்றும் கேட்கிறார்கள். அது பற்றி ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே வாடகைக்கார் ஓட்டுநர்களும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களும் அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் வேண்டும் என்பதிலிருந்து ஊதியம் நிரந்தரமாகக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பது வரை பலவித கோரிக்கைகளும் அரசின் முன் வைத்திருக்கிறார்கள். அவைகள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் அந்த வாகனத்திற்கு உரிமையாளர்களாகவே ஆக வேண்டும் என்பதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு ஆலோசித்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் ஊரிலே இருந்து எக்மோர் ஸ்டேஷனுக்கு வந்து பிறகு அங்கிருந்து சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்கு வரவேண்டுமென்றால் டாக்சி டிரைவர்கள் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் வர மறுக்கிறார்கள். ஆகவே, இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா அல்லது அவர்கள் உறுப்பினர் விடுதிக்கு வந்து சேர வேறு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் 'கூட ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள், டாக்சி டிரைவர்கள் ஆகியோர்

வர மறுப்பார்களேயானால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதோடு மட்டுமின்றி அங்கு காவல் துறையினர் மூலமாக இவற்றை ஒழுங்கு படுத்தி கண்டிப்பாக நடை முறைப்படுத்த வேண்டும் என்ற உத்தரவும் இடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே' சென்னையில் இருக்கின்ற டாக்சிகளுக்கு அதிகமாகக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, டாக்சிகள் பெட்ரோலில் ஓடுவதற்குப் பதிலாக டீசலில் ஓடுவதற்கு ஏதுவாக மாற்றுவதற்கு அரசு கடனுதவி அளித்தால் பல டாக்சிகள் டீசலில் ஓடுவதாக ஆக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படி அனைவருக்கும் தர முடியவில்லை என்று சொன்னாலும் கூட்டுறவுத் துறையில் ஓடும் டாக்சிகளுக்காவது இந்த மாதிரி டீசலில் ஓடுமாறு மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு டீசல் எஞ்ஜின் விலை 18 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இதிலே பல சிரமங்கள் இருக்கும் காரணத்தால் நடைமுறைப்படுத்துவதில் சிரமம் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கூட்டுறவுத் துறையின் மூலம் தனியாக இயங்கும் டாக்சி என்று இல்லை. கடனைக் கட்டும் வரைதான் அது கூட்டுறவு சொஸைட்டிகள் என்று சொல்லப்படுகிறது. கடன் கொடுத்து முடிக்கப்பட்ட பிறகு தனித்து இயங்குகிறார்கள். எனவே இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள்.

*வினா 457— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆட்டோ ரிக்ஷாக்களில் தவறான முறையில் மீட்டரைப் பொருத்தி முறைகேடு செய்வதைத் தடுக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?